**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 344/2021**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துராஜப்பா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 06th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கடையம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்தபோது, 29.09.2019 ம் தேதி, மாலை 18.00 மணிக்கு என்னுடன் காவலர் அருணாகரன் என்பவரும் கீழப்பாவூரில் உள்ள முப்பிடாதியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பாட்டு கச்சேரி பாதுகாப்பு அலுவலாக சென்றோம். 21.45 மணியளவில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட கீழப்பாவூர், முத்தாரம்மன் கோவில் தெருவை சேர்ந்த முருகன் என்பவரின் மகன் அருணாச்சலம் என்ற வினோத் ஆடிக்கொண்டும், விசல் அடித்து

கொண்டும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டார். அருகில் சென்ற நானும், அ.சா.1ம் அவர்களை கண்டித்தபோது, அருகே நின்று கொண்டிருந்த கீழப்பாவூர், மூவேந்தர் தெற்கு தெருவைச் சேர்ந்த அவரது நண்பர் சுடலைஈசன் என்பவரின் மகன் தங்கபாண்டியன் என்பவர் "எதற்காக எனது நண்பனை ஆட வேண்டாம் என்று சொல்கிறீர்கள், "இது எங்கள் ஊர், நாங்கள் இவ்வாறு தான் ஆடுவோம் என்று கூறி எதிரிகள் இருவரும் எங்களிடம் வாக்குவாதம் செய்து அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து, குறுக்கீடு செய்தார். அருகில் இருந்தவர்கள் சத்தம் போடவும், இருவரும் சென்று விட்டார்கள். மீண்டும் இரவு 22.00 மணிக்கு பாட்டு கச்சேரி நடைபெற்ற இடத்திற்கு வந்த எதிரிகள் இருவரும் கையில் ஆளுக்கொரு இரும்பு கம்பியை வைத்துக்கொண்டு, எதிரி வினோத் அ.சா.1 ஐ பார்த்து "இப்போ பேசுங்க, போலீஸ்கார புண்ட மக்களா" என்று கூறி, கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால், அவரது தலையில் அடிக்க வந்தார். அவர் சற்று விலகியதால் அந்த அடி தரையில் பட்டது. அவர் தலையின் மீது பட்டிருந்தால் அவரது உயிரே போயிருக்கும். உடனே அருகில் இருந்த நான் தங்கப்பாண்டியனிடம் "ஏம்ப்பா இப்படி செய்கறீர்கள்" என்று கேட்டபோது, தங்கப்பாண்டியன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது தலையை நோக்கி அடிக்க வந்தார். நான் சுதாரித்து விலகி கொண்டதால் அந்த அடி என் தலையில் படவில்லை. அந்த அடி என் தலையில் பட்டிருந்தால் அங்கேயே செத்தே போயிருப்பேன். உடனே, அருகில் பாட்டு கச்சேரியை பார்த்து கொண்டிருந்த ஊர்க்காரர்கள் எதிரிகளை சத்தம் போட எதிரிகள் எங்களை பார்த்து "எங்கள் ஊரில் இவ்வாறு தான் ஆடுவோம். எங்களை யாராவது சத்தம் போட்டால் கம்பியால்

அடித்து கொன்று விடுவோம்" என்று மிரட்டி விட்டு சென்று விட்டார்கள். இந்த சம்பவம் சம்பந்தமாக மறுநாள் காலை நிலையம் ஆஜராகி நடந்த சம்பவத்தை தெரிவித்து, காலை 08.00 மணிக்கு இந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க அ.சா.1 தனி அறிக்கை கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை.

C KATHIRAVAN Digitally signed by C KATHIRAVAN Date: 2025.05.12 15:48:23 +0530